

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.6.2025) முகாம் அலுவலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சந்தித்து, புகையிலை இல்லாத இளைஞர்கள் திட்டம் : இளைஞர்கள் திட்டம் 2.0ஐ சிறப்பாக செயல்படுத்தியதற்காக, தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சிறப்பாக செயல்படும் மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டு, தேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் தேசிய மதிப்பாய்வுக் கூட்டத்தின் போது ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டி.எஸ். செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.6.2025) முகாம் அலுவலகத்தில், காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### புகையிலை இல்லாத இளைஞர்கள் திட்டம்!

# தமிழ்நாடு சிறப்பாக செயல்படுவதாக ஒன்றிய சுகாதாரம் - குடும்ப நல அமைச்சகம் விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம், அமைச்சர் மா.சுப்பிரமணியன் காண்பித்து வாழ்த்து!

சென்னை, ஜூன் 23- புகையிலை இல்லாத இளைஞர்கள் திட்டம் 2.0ஐ சிறப்பாக செயல்படுத்திய தற்காக, ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் தமிழ்நாட்டிற்கு சிறப்பாக செயல்படும் மாநிலத்திற்கான விருது வழங்கப்பட்டது - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் விருதினை காண்பித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்து பெற்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.6.2025) முகாம் அலுவலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்து, புகையிலை இல்லாத இளைஞர்கள் திட்டம் 2.0ஐ சிறப்பாக செயல்படுத்திய தற்காக, தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சிறப்பாக செயல்படும் மாநிலமாக அங்கீரிக்கப்பட்டு, தேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் தேசிய மதிப்பாய்வுக் கூட்டத்தின் போது ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார்.


தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டம், தமிழ்நாட்டில் 2007-ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு, சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் தடுப்புசட்டம் - 2003 அமல்படுத்தப்பட்டு பொது இடங்களில் புகைபிடிக்க தடை செய்தல், சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்களை 18 வயதிற்கு குறைந்தவர்களுக்கு மற்றும் கல்வி நிறுவனங்களை சுற்றி 100 முற்றம் சுற்றளவிற்கு விற்பனை செய்வதை தடை செய்தல், புகையிலைப் பொருட்களை விளம்பரம் செய்வதை தடை செய்தல், சுகாதார நல எச்சரிக்கையோடு கூடிய புகைப்படம் புகையிலை பொருட்கள் மீது அச்சிடப்பட்டிருக்க வேண்டும் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், 2.10.2008 முதல் 31.1.2025 வரையில் சட்டமீறல் செய்த 3.89 இலட்சம் நபர்களிடமிருந்து 6.83 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 45,374 பள்ளிகள் மற்றும் 2,153 கல்லூரிகள் புகையிலை இல்லா கல்வி நிறுவனங் களாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கூடுதல் முயற்சியின் காரணமாக இதுவரை 1,240 கிராமங்கள் புகையிலை இல்லா கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரத்தை படிப்படியாக மேம்படுத்தும் வகையில் COTPA, 2003 சட்டத்திருத்தம் கொண்டு வந்து புகைகுழல் கூடங்களை மாநிலம் முழுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

தேசியப் புகையிலை கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு 24.9.2024 முதல் 23.11.2024 வரை 60 நாட்கள் புகையிலையின் தீங்கு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இளைஞர்களுக்கான புகையிலை இல்லா பிரச்சாரம் நடத்தப்பட்டது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய அளவில் புகையிலை தடுப்புச் சட்டத்தையும், புகையிலை இல்லாத இளைஞர்கள் திட்டம் 2.0ஐ சிறப்பாக செயல்படுத்தியதற்காக, தமிழ்நாட்டிற்கு தேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் தேசிய மதிப்பாய்வுக் கூட்டத்தின் போது ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் விருது வழங்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களிடம் விருதினை காண்பித்து வாழ்த்து பெற்ற நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்கு மார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டி.எஸ்.செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர். ஆர்.மகேந்திரன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### அலிசேக் மீரான் தலைமையில் மும்பை புறநகர் தி.மு.க.

# ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் கலைஞர் பிறந்த நாள் - நலஉதவிகள்!

## அமைச்சர் கோவி.செழியன் வழங்குகிறார்!

மும்பை, ஜூன்.23- மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் வருகிற (28-06-2025 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஆரே காலனி, யூனிட் எண்.7, நெல்லை விநாயகர் கோவில் திடலில் வைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் 102 ஆவது பிறந்தநாள் விழா வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மும்பை புறநகர் மாநிலப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் தலைமையில் நடைபெறவுள்ளது. விழாவில் தமிழ்நாடு அரசு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார். பொறுப்புக்குழு உறுப்பினர்களான சிவக்குமார் சுந்தர்ராஜ் வரவேற்புரையும் முனைவர் வதிலை பிரதாபன் தொடக்கவுரையும் ஆற்றுகிறார்கள்.

தந்தை பெரியார் படத்தை பொறுப்புக் குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசனும், பேரறிஞர் அண்ணா படத்தை ஆரே காலனிக் கிளைக் கழக முன்னோடி கு.தர்மலிங்கமும், முத்தமிழறிஞர் கலைஞர் படத்தை மாநில இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமாரும் திறந்து வைக்கிறார்கள்.

விழாவில், கழக உறுப்பினர் உரிமை அட்டைகளை கழகத் தோழர்களுக்கு வழங்குவதுடன் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் அமைச்சர் கோவி. செழியன் வழங்கவுள்ளார்.

பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி.கிருஷ்ணன், அ.இளங்கோ, வே. சதானந்தன், வெ.அ. ஜெய்னுலாபுதீன் வீரை சோ.பாபு, மெஹபூப் பாஷா சோ.பா. குமரேசன், சிலுவைதாசன், மற்றும் மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் பாவலர் நெல்லை பைந்தமிழ், புறநகர் தி.மு. கழகப் பேச்சாளர் முகமதலி ஜின்னா பாண்டு, (ஆரே காலனி கிளை) இளைஞரணித் துணை அமைப்பாளர் கவிஞர் வீரமணி, இலக்கிய அணித் துணை அமைப்பாளர் பொய்சர் மூர்த்தி, ஆரெ காலனி காங்கிரஸ் கமிட்டிப் பேச்சாளர் செல்லக்கண்ணு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

ஆரே காலனிக் கிளைக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் - சேகர் சுப்பையா, கனகராஜ், தமிழ்ச் செல்வன், சுரேஷ் குமார், கட்டமுத்து, முனியன் கோவிந்தராஜ், கிருஷ்ண மூர்த்தி கணேசன், பொன்னுசாமி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

க.ஜீவானந்தம் (கல்யாண் கிளைக் கழகம், தமிழினநேசன் (ஜோஹேஸ்வரி கிளைக் கழகம்) அ. பாலமுருகன் தானே கிளைச் செயலாளர், எஸ். பெருமாள் முலுண்டு கிளைச் செயலாளர், வாஷி கிளைக்கழகச் செயலாளர் பழனி, அ. பால சுப்ரமணியம் (முலுண்ட் கிளை) எஸ். பி. செழியன் (மால்வாணி திமுக) முத்தமிழ் தண்டயாணி (அம்பர்நாத்) முஸ்டாக் பாய் (பீவாண்டி கிளை, அ.பால முருகன் (தானே கிளை), வாஷி கிளைக் கழகத் தோழர்கள், தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, குலசேகரன், ஜி.பசுபதிநாதன், சு.சுடலையாண்டி சயான் கிளைக் கழகச் செயலாளர் நம்பி (செம்பூர் கிளைக் கழகம்) ஆழ்வார் சீத்தா கேம்ப் கிளைக்கழகம் ராஜேந்திரன், ஜஸ்டின் அம்பர்நாத் கிளைக் கழகச் செயலாளர், வேல்முருகன் திவா கிளைக்கழகச் செயலாளர் எம்.பொன்மணி அந்தேரி மேற்கு தி.மு. கழகம் விஜயகுமார் (கோரெகாவ்ன் கிளை) பரமசிவம் (செம்பூர்) பாண்டுப் செல்லத்துரை, உதயசூரியன், ஆனந்தரமேஷ் (அம்பர்நாத் கிளை) க.சுந்தர், மாரி, (பாண்டுப் கிளை) செய்யதுபாய், ராமு, (அம்பர்நாத் கிளை) ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இறுதியில் ஆரே காலணிக் கிளைக் கழக முன்னோடி துரைராஜ் நன்றியுரையுடன் விழா நிறைவுறுகிறது.

மும்பையின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் கழக உணர்வாளர்கள் யாவரும் விழாவில் கலந்து மகிழும் படி அன்புடன் அழைக்கப் படுகிறார்கள்.

### அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

# கிருஷ்ணகிரியில் 31 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி!

## மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் - ஒய்.பிரகாஷ் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஜூன் 23 – 31 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியை, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தே.மதியழகன் ஒய். பிரகாஷ், டி.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து, 259 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 52 இலட்சத்து 93 ஆயிரத்து 982 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு நான்காண்டு நிறைவடைந்ததையொட்டி, "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு என்ற நான்காண்டு சாதனை மலர் கையேட்டினை வெளியிட்டார்.

கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடி அருகில், கலைஞர் திடலில், 31 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியை, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன், ஒசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ. சத்யா ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து, அனைத்து துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட அரசின் திட்டங்கள் குறித்த அரங்குகளை பார்வையிட்டு, பல்வேறு துறைகள் சார்பில் 259 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 52 இலட்சத்து 93 ஆயிரத்து 982 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, பல்வேறு காய்கறிகளில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர், முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டதை பார்வையிட்டனர். தொடர்ந்து, கூட்டுறவுத் துறை சார்பாக, ஓசூர் மற்றும் பர்கூர் பகுதிகளில் உள்ள 35 புதிய நியாய விலைக் கடைகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செங்குட்டுவன், முருகன் உள்ளிட்டார் பங்கேற்றனர்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசும்போது முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் வேளாண் பொருட்களின் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வருவாயினை பன்மடங்காக உயர்த்திடவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தோட்டக் கலைத்துறையில் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்திலும் இல்லாத தனிச்சிறப்பு கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1,02,000 எக்டர் பரப்பளவில் தோட்டக் கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் 40,070 எக்டர் பரப்பளவில் காய்கறி பயிர்களும் 33,550 எக்டர் பரப்பளவில் பழப்பயிர்களும் மற்றும் 11,363 எக்டர் பரப்பளவில் மலர்களும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் முதன்மையாக 32,147 எக்டர் பரப்பளவில் மா பயிரிடப்பட்டு 2.60 இலட்சம் மெட்ரிக் டன் அளவில் மா உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதில் 1.20 இலட்சம் மெட்ரிக் டன் பழங்கள் மாம்பழக்கூழ் உற்பத்திக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவும் சாதகமான சீதோஷண நிலை, மழை மற்றும் மண்வளத்தின் காரணமாக மா பயிர் இலாபகரமாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும், நமது அரசு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் இம்மாவட்டத்தில் 202425ம் ஆண்டில் மட்டும் 10,964 இலட்சம் மதிப்பில் தேசிய மற்றும் மாநில திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் 68,000 விவசாய பெருமக்கள் பயனடைந்துள்ளனர். இதேபோன்று இவ்வாண்டு 202526ல் ரூ.11,740 இலட்சம் மதிப்பில் சுமார் 87,203 விவசாயிகள் திட்டங்கள் பெற்று பயன் பெற உள்ளார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெங்களூரா, அல்போன்சா, பங்கனப்பள்ளி, நீலம், மல்கோவா, காலப்பாடு, ரூமானி, செந்தூரா, சேலம் பெங்களூரா, இமாபசந்த் மற்றும் மல்லிகா ஆகிய இரகங்கள் பெருமளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இதில் ஏற்றுமதிக்கு உகந்த இரகங்களான அல்போன்சா, மல்கோவா, பங்கனப்பள்ளி ஆகியவை ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும், அல்போன்சா, பெங்களூரா மற்றும் நீலம் ஆகிய இரகங்கள் மாம்பழக்கூழ் மற்றும் இதர பயன்பாட்டிற்கு உகந்ததாக உள்ளது.

பொதுமக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் அனைத்து துறைகளின் சார்பில், அரசு சாதனை விளக்கக் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் 31வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியை இன்று முதல் நாள் தோறும் மாலை 05.00 மணி முதல் கண்டுகளிக்கலாம் என அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கல்லூரியில் நடைபெற்ற விழா நிகழ்வில், கராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு கல்லூரி வளாகத்தை பார்வையிட்டு சேர்க்கை அனுமதியை மாணாக்கர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார், மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சீ.கதிரவன், கல்லூரி கல்வி இணை இயக்குநர் பி.பொன்முத்துராமலிங்கம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரிணி, அரசுத்துறை அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில் ரூ.47.42 இலட்சத்தில் 4 முடிவுற்ற திட்டப்பணிகள் திறப்பு!

# ரூ.5.11 கோடி மதிப்பீட்டில் 35 புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜூன் 23– அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் ரூ.47.42 இலட்சம் மதிப்பீட்டில் 04 முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, ரூ.5.11 கோடி மதிப்பீட்டில் 35 புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி கலந்து கொண்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் கிராம ஊராட்சிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலை களை மேம்படுத்துதல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஏரிகள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் ரூ.47.42 இலட்சம் மதிப்பீட்டில் 04 முடிவுற்ற திட்டப்பணிகளும், ரூ.5.11 கோடி மதிப்பீட்டில் 35 புதிய திட்டப்பணிகளும் என மொத்தம் ரூ.5.58 கோடி மதிப்பீட்டிலான பணிகளை இன்றையதினம் தொடங்கி வைத்தார்.

அதன்படி செந்துறை ஊராட்சி ஒன்றியம், வங்காரம் கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு மையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். தொடர்ந்து, வங்காரம் கிராமத்தில் ரூ.18.42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். பின்னர், வங்காரம் புதிய ஆதிதிராவிடர் பகுதியில் ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், மேலும், புதிய ஆதிதிராவிடர் தெருவில் ரூ.3.54 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், வங்காரம் மேலத்தெருவில் ரூ.2.86 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும் துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து அயன்தத்தனூர் ஊராட்சி மேற்குத்தெருவில் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து அயன்தத்தனூர் ஊராட்சியில் ரூ.10.24 இலட்சம் மதிப்பீட்டில் மின்னேரி ஆழப்படுத்துதல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல் பணியையும், பின்னர், ரூ.17.25 இலட்சம் மதிப்பீட்டில் அயன்தத்தனூர் ஊராட்சியல் அங்கன்வாடி மைய கட்டடம் கட்டும் பணிகளையும் துவக்கி வைத்து, பணிகளை உரிய காலத்திற்குள் விரைந்து முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், பூமுடையான் குடிக்காடு நடுத்தெருவில் ரூ.11.90 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து பூமுடையான் குடிக்காடு தெற்குதெருவில் ரூ.2.82 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், பூமுடையான் குடிக்காடு கிழக்குத் தெருவில் ரூ.7.58 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், ரூ.237.99 இலட்சம் மதிப்பீட்டில் சிறுகளத்தூர் துளார் சாலை முதல் பூமுடையான் குடிக்காடு சாலை வரையில் சாலை மேம்படுத்தும் பணியையும் அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, துளார் ஊராட்சியில் ரூ.6.20 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து துளார் புதிய ஆதிதிராவிடரபகுதியில் ரூ.6.03 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து துளார் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் ரூ.11.96 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணியையும், பின்னர், துளார் ஊராட்சியில் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் கதிரடிக்கும் களம் அமைக்கும் பணியையும் துவக்கி வைத்து பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, விழுப்பணங்குறிச்சி கிராமத்தில் ரூ.3.36 இலட்சம் மதிப்பீட்டில் மெட்டல் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், மருவத்தூர் ஊராட்சி கீழத்தெருவில் ரூ.3.54 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து, ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் மருவத்தூர் அருந்ததியர் மயான சாலை, மெட்டல் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், மருவத்தூர் ஆதிதிராவிடர் பகுதியில் ரூ.90,000 மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து, ரூ.3.28 இலட்சம் மதிப்பீட்டில் மருவத்தூர் துணை சுகாதார மையம் முன்பகுதியில் பேவர் பிளாக் அமைக்கும் பணியையும், பின்னர், மருவத்தூர் கிராமத்தில் ரூ.7.59 இலட்சம் மதிப்பீட்டில் ஊத்தங்குழி ஏரி ஆழப்படுத்துதல் மற்றும் கரைகள் பலப்படுத்துதல் பணியையும், தொடர்ந்து, மருவத்தூர் ஊராட்சியில் ரூ.31.40 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டடம் கட்டும் பணியையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரவேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். காலை 7 மணிக்கு துவங்கிய நிகழ்ச்சி மாலை 4 மணியளவில் நிறைவு பெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் முனைவர். ஆ.ரா.சிவராமன், பழனிசாமி, வேலுமணி, முருகன், ரவி மற்றும் இதர அரசு அலுவலர்கள், பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், பொன்.செல்வம், கே.சி.லூயிக திரவன், செ.இளஞ்செழியன், ஆதி. இளங்கோவன், காளமேகம், சசிகுமார், ராமராஜன்,செல்வம், தர்மராஜ்,ரமணி, ஆனந்த், சுந்தர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.